திருவண்ணாமலை வேளாண்மை இணை இயக்குநர்(பொ) அவர்களின் செயல்முறை ஆணை,
பிறப்பிப்பவர் – திரு.சே.கண்ணன், பி.எஸ்ஸி (விவ).,

செ.மு.ஆ.எண்.அ2/16960/2022 நாள்.19.09.2024

பொருள்– பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப் பணி – 13.03.2012 அன்று இயற்கை எய்திய அ.ச.அரிதாஸ்காந்தி, உதவி வேளாண்மை அலுவலர் அவர்களின் வாரிசு/மகள் திருமதி.அ.செம்மலர், அவர்களை கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் (பிணையமற்றது) – ஆகப் பணி நியமனம் செய்யப்பட்டது – இளநிலை உதவியாளர்(பிணையமற்றது) பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்பட்டது – தகுதிகாண் பருவத்தில் வைத்து ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை– 1 அரசாணை (3டி) எண்.292,வேளாண்மை–உழவர் நலத்(வேஇ.9)துறை நாள்.12.08.2024.

2 வேளாண்மை இயக்குநர், சென்னை–5 அவர்களின் கடித எண். அஇபி8/142585/2023, நாள்.27.08.2024.

------

**ஆணை:–**

பார்வை(1)–ல் காணும் அரசாணையின்படி, கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டு திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளர்(பிணையமற்றது) ஆக 23.12.2022 அன்று முற்பகல் முதல் பணிபுரிந்து, தற்போது வெம்பாக்கம், வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளர் (பிணையமற்றது) ஆக பணிபுரியும் திருமதி.அ.செம்மலர், அவர்களுக்கு 23.12.2022 அன்று முற்பகல் முதல் இளநிலை உதவியாளர்(பிணையமற்றது) பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, பணிவரன்முறை செய்யப்பட்ட நாள்.23.12.2022 முதல் இப்பணியாளரை இளநிலை உதவியாளர்(பிணையமற்றது) பதவியில் மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டு ஆண்டுகள் தகுதிகாண் பருவத்தில் வைத்து ஆணை வழங்கப்படுகிறது. இவர் தகுதிகாண் பருவத்தினை நிறைவு செய்த பின்னரே இரண்டாவது மற்றும் அதனைத் தொடர்ந்த காலமுறை ஊதிய உயர்வுகள் பெற தகுதி பெறுவார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஒம்/–சே.கண்ணன்,
வேளாண்மை இணை இயக்குநர்(பொ),
திருவண்ணாமலை.

பெறுநர்
திருமதி.அ.செம்மலர்,
இளநிலை உதவியாளர்(பிணையமற்றது),
வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம்,
வெம்பாக்கம். (வேளாண்மை உதவி இயக்குநர், வெம்பாக்கம் மூலமாக)

நகல்:– வேளாண்மை உதவி இயக்குநர், வெம்பாக்கம்
நகல் :–வேளாண்மை இயக்குநர், சென்னை – 5 அவர்களுக்கு – தகவலுக்காகப் பணிந்து அனுப்பி வைக்கப்படுகிறது. (அஇபி.8 – பிரிவிற்கு).
நகல் :–பணியாளர் பணிப்பதிவேட்டிற்கு
நகல் :–அ2 பிரிவின் முதன்மை ஆணை தொகுப்பிற்கு.
நகல் :–உபரி–1

//உத்தரவுப்படி //

ஆட்சி அலுவலர் 19/9/24

19/9/24

Scanned with OKEN Scanner